உன்னதமானவரின் மறைவில் இருக்கிறேன்

In the Shelter of the Most High

Album 23 Song 5 | ஆல்பம் 23 பாடல் 5



Song 5 உன்னதமானவரின் மறைவில் இருக்கிறேன்

Psalm 91 – Beautiful promise of divine protection for those who dwell in the secret place of the Most High. Covers every kind of danger — physical, spiritual, and unseen.

உன்னதமானவரின் மறைவில் இருக்கிறேன்
சர்வ வல்லவருடைய நிழலில் தங்குகிறேன்
நீர் என் அடைக்கலம் நீரே என் கோட்டை
நீரே என் தேவன் நான் நம்பும் ஆண்டவர்

உன்னதமானவரின் மறைவில் இருக்கிறேன்
சர்வ வல்லவருடைய நிழலில் தங்குகிறேன்
நீர் என் அடைக்கலம் நீரே என் கோட்டை
நீரே என் தேவன் நான் நம்பும் ஆண்டவர்

KJC DNN

என்னை வேடனுடைய கண்ணிக்கும்
பாழாக்கும் கொள்ளை நோய்களுக்கும்
தப்புவிப்பார் தப்புவிப்பார்
கர்த்தரே என்னை தப்புவிப்பார்

சிறகுகளாலே என்னை மூடுவார்
செட்டைகளின் கீழே நான் அடைக்கலம் புகுவேன்
சத்தியம் இது சத்தியம்
கர்த்தரின் சத்தியம் எனக்கு கேடகம்

இரவில் உண்டாகும் பயங்கரத்திற்கும்

பகலில் பறந்துவரும் அம்புகளுக்கும்
அஞ்சிடேன் அஞ்சிடேன்
கர்த்தருக்கே நான் பயந்து நடப்பேன்

இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும்
மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும்
பயப்படேன் பயப்படேன்
கர்த்தரே எனக்காய் யுத்தம் செய்வார்

என் பக்கத்தில் ஆயிரம் பேர் விழுந்தாலும்
வலப்பக்கத்தில் பதினாயிரம் பேர் விழுந்தாலும்
அணுகாது அது அணுகாது
என் கண்களால் மட்டும் நான் அதைப் பார்ப்பேன்

KJC-DNN

பொல்லாப்பு எனக்கு நேரிடாது
வாதை என் கூடாரத்தை அணுகாது
வராது எதுவும் வராது
கர்த்தரே என்னை காத்திடுவார்

என் பாதம் கல்லிலே இடறாது
நான் செல்லும் வழியிலெல்லாம் என்னைக் காத்திடுவார்
கட்டளையிட்டார் தூதருக்கு கட்டளையிட்டார்
என்னை அவர்கள் கையில் ஏந்திக்கொண்டு போகச்செய்வார்

சிங்கத்தின் மேலும் நான் நடந்திடுவேன்

விரியன் பாம்பின் மேலும் நடந்திடுவேன்
மிதிப்பேன் சிங்கத்தை மிதிப்பேன்
வலுசர்ப்பத்தையும் நான் மிதித்தே போடுவேன்

உம்மிடத்தில் நான் வாஞ்சையாய் இருக்கிறேன்
தேவன் நீர் என்னை விடுவிப்பீர்
விடுவிப்பீர் என்னை விடுவிப்பீர்
உம்மை அறிந்தபடியால் என்னை உயர்ந்த இடத்தில் வைப்பீர்

நான் உம்மை நோக்கி கூப்பிடுவேன்
நீர் எனக்கு மறுஉத்தரவு அருளுவீர்
கனப்படுத்துவீர் என்னை கனப்படுத்துவீர்
ஆபத்திலே என்னோடிருந்து என்னை தப்புவிப்பீர்

KJC-DNN

நீடித்த நாட்களால் என்னைத் திருப்தியாக்கி
உமது இரட்சிப்பை எனக்கு காண்பிப்பீர்
காட்டிடுவீர் எனக்கு காட்டிடுவீர்
உமது வல்லமையை உணரச் செய்வீர்

உன்னதமானவரின் மறைவில் இருக்கிறேன்
சர்வ வல்லவருடைய நிழலில் தங்குகிறேன்
நீர் என் அடைக்கலம் நீரே என் கோட்டை
நீரே என் தேவன் நான் நம்பும் ஆண்டவர்


KJC-DNN